05.09.2024 MCOP No. 29/2021

சாட்சி : PW 1 முத்து

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

இந்த விபத்து 28.01.2021 தேதியில் காளையார்கோவிலில் நடந்தது. இரவு 10 மணிக்கு நடந்தது. விபத்து சமயத்தில் பேக்கரி கடையை மூடிவிட்டு சாப்பாட்டுக்கடைக்கு சென்று கொண்டிருந்தேன். விபத்து நடந்த இடம் தொண்டி காளையார்கோவில் தேசிய நெடுஞ்சாலை ஆகும். நானும் எனது நண்பர் இராஜசேகரனும் சாப்பிடச்சென்றோம். நானும் எனது நண்பரும் சாலையை கடக்கும் போது தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் லாரி பேரிகார்டில் அடித்து பேரிகார்டு என்மீது விழுந்து விட்டது. நான் லாரி வருவதை கவனிக்காமல் சென்றதால் தான் பேரிகார்டு என்மீது மோதி விபத்து ஏறப்பட்டது என்று சொன்னால' சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறிவிட்டதா என்றால் முழங்காலில் தகடு பொருத்தப்பட்டுள்ளது மற்ற இடங்களில் ஆறிவிட்டது. விபத்து நடந்தவுடன் சிவகங்கை அரசு மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தேன். மாதிரி வரைபடத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பேக்கரி கடையில் வேலைபார்த்தேன் என்பதற்கு வருமானச்சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் விடுவிப்பு அறிக்கை ஆகியவை வழக்கிற்க்காக தாயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. விபத்துக்கு மறுநாள் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தானது பேரிகார்டு மோதிதான் ஏற்பட்டது என்றால் 3 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க தேவையில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.